ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# வளையாபதி
# இலக்கியம்: நாடகப் பனுவலாக்கம் : வானொலி அரங்கேற்றம்

40

**பாலு ஆனந்த்.செ**

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**

**தியாகராசர் கல்லூரி, மதுரை .**

**ஆய்வுச் சுருக்கம்**

ஐம்பெரும் காப்பிய வரிசையை அலங்கரிக்கும் வளையாபதியின் பின்னணி கதை, முரண், நாடகப் பனுவலாக்கம், வானொலி அரங்கேற்றம் என்னும் தன்மைகளில் முனைவர் இராம.மலர்விழி மங்கையர்க்கரசி அவர்களின் வளையாபதி நாடக வடிவம் என்னும் நூலின் துணைக் கொண்டும் வானொலி நாடகத்தின் ஒலியிணைப்பின் துணைக் கொண்டும் ஆராய்ந்து அதன் முடிவுகளை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமையும்.

**திறவுச் சொற்கள்:**

வளையாபதி, நாடகம், பனுவலாக்கம் , வானொலி நாடகம் , இலக்கியம் , காப்பியம்

**முகவுரை :**

இயல், இசை , நாடகம் என விரிந்த முத்தமிழில் , இயலும் இசையும் கலந்த இனிய வடிவம் நாடகம். ஏடெடுத்து படிக்கப் போதிய நேரம் இல்லாதவர்களுக்கும் , படிப்பறிவு இல்லாதவர்களுக்கும் கூடப் பொழுதுபோக்கு என்ற வகையில் மட்டும் நில்லாது உலகியல் நடப்பினை போகிற போக்கில் எடுத்துரைக்கும் செயல் வடிவமும் கூட . பொருண்மையின் அடிப்படையில் , சமூக நாடகங்கள், புராண இதிகாச நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், வாழ்க்கை வரலாற்று நாடகங்கள், அரசியல் நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், துப்பறியும் நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள் என நாடகங்களின் உள்ளடக்கமும் உத்திகளும் வேறுபடுகின்றன. இதில் இலக்கிய நாடகங்கள் என்பது சங்க இலக்கியம், காப்பியங்கள் ஆகியவற்றில் காணப்பெறும் சிற்சில கதாபாத்திரங்களையும், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளையும் மையப் பொருளாகக் கொண்டு புனையப்பெறுவன. இவற்றைக் கவிதையில் அமைப்பதும் உண்டு. உரைநடையில் அமைப்பதும் உண்டு. பாரதிதாசனின் பிசிராந்தையார், சேரதாண்டவம், வ.சுப.மாணிக்கனாரின் மனைவியின் உரிமை (வள்ளல் பேகன் வரலாறு), புலவர் பழநியின் அனிச்ச அடி (பெண் கொலை புரிந்த நன்னன் கதை), மறைமலையடிகளின் அம்பிகாபதி அமராவதி, அ.ச.ஞானசம்பந்தனாரின் தெள்ளாறெறிந்த நந்தி போன்ற நாடகங்கள் இவ்வகையுள் அடங்கும். தொலைக்காட்சியின் வளர்ச்சிக்கு முன்னர் வானொலியை இயங்குதளமாகக் கொண்டு மேற்கூறிய நாடக வகைகள் வானொலி நாடகங்களாகப் பரிணமித்தன. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான வளையாபதி , முனைவர். இராம மலர்விழி மங்கையர்க்கரசி அவர்களால் நாடகப் பனுவலாக்கப்பட்டு பின்னர் வானொலி நாடகமாக ஒலிப்பரப்பாகியுள்ளது. வளையாபதி என்னும் காப்பிய இலக்கியம் , வானொலி நாடகமாக ஒளிரும் முப்பரிமாண நிலையை எடுத்தியம்புகிறது இக்கட்டுரை.

**வளையாபதி : இலக்கியம்**

தமிழ் இலக்கிய வரலாற்றின் காப்பியப் பக்கத்தில் ஆசிரியர் பெயர் அறியப்படாத போதிலும்,

முழுமையாகக் கிடைக்கப் பெறாத போதிலும் அறத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் பாங்கில் தனக்கென தனித்த இடத்தைப் பெறுகிறது வளையாபதி . ஐம்பெரும் காப்பிய வரிசையை விளக்கும் பழம்பாடலொன்று ,

**" சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்**
**கந்தா மணிமேகலை புனைந்தான் - நந்தா**
**வளையாபதி தருவான் வாசவனுக்கு ஈந்தான்**
**திளையாத குண்டல கேசிக்கும்"**

என்று குறிப்பிடுகிறது. 'தொழுவல் தொல்வினை நீங்குக' என்று அருகக் கடவுளைப் போற்றும் கடவுள் வாழ்த்தும், 'துக்கம் துடைக்கும்' என்ற இரண்டாவது பாடலில் 'நிக்கந்த வேடத்து இருடி கணங்களும்' என்னும் செய்யளடியும் இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது என்பதை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இக்காப்பியம் 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் , 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் இருவேறு கருத்துகள் ஆய்வுலகில் நிலவுகின்றன. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலை யாப்பருங்கல விருத்தி உரைகாரரும், இளம்பூரணரும் தத்தம் உரைகளில் மேற்கோளாகச் சுட்டிக் காட்டியிருப்பினும் வளையாபதி என்று குறிப்பிடவில்லை. தொல்காப்பியத்திற்கு உரை செய்த நச்சினார்க்கினியர் தான் இப்பாடல் வளையாபதியைச் சார்ந்தது என்று தம் உரையினில் குறிப்பிடுகின்றார். புறத்திரட்டு என்ற பெயரில் தொகுக்கப் பட்ட நூலில் வளையாபதியின் 66 பாடல்களைப் பல அதிகாரங்களில் காணமுடிகின்றது. 19ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த இவ்விலக்கியம் பின்னர் எப்படியோ அழிந்துவிட்டது. இதன் பிரதியைத் திருவாவடுதுறை ஆதினத்தில் பார்த்ததாக உ.வே. சாமிநாதய்யர் குறிப்பிடுகிறார். பின்னர் இதனைப் பதிப்பிக்கும் நோக்கத்தோடு தேடியபோது, எங்கும் கிடைக்கப் பெறவில்லை என வருத்தத்துடன் அவர் குறிப்பிடுகிறார். 'கவியழகு வேண்டி இவர் வளையாபதியினை நினைத்தார்'என்று தக்கயாக்கப் பரணியின் உரையாசிரியர் குறிப்பிடுவது இக்காப்பியத்தின் இலக்கிய நலனைச் சுட்டுகிறது. தற்போது கிடைக்கப்பெறும் வளையாபதி பதிப்புகளில் 72 பாடல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

**கதையும் முரணும் :**

வளையாபதியின் கதையானது; 'வைசிய புராணம்' என்ற புராணத்தில் வருகின்ற 'வைர வாணிகள் வளையாபதி பெற்ற சுருக்கம்' என்ற கதையினை ஒட்டியதாகவே வழக்கில் உள்ளது. புகார் நகரத்தினில் வணிகர் குலத்தில் நாராயணன் என்னும் வைர வியாபாரி ஒருவன் இருந்தான் அவனிடம் ஒன்பது கோடி அளவிலான பொன் இருந்தது. அவன் மிகப்பெரிய செல்வந்தனாக இருந்ததனால், அவனை மக்கள் அனைவரும் நவகோடி நாராயணன் என்றே அழைத்தனர். அவன் ஒரு சிறந்த சிவபக்தனாகத் திகழ்ந்தான். நாராயணன் இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொண்டான் அவர்களில் ஒருத்தி அவனுடைய வணிகர் குலத்தினைச் சேர்ந்தவள். இரண்டாவது மனைவி வேறு ஒரு குலத்தினைச் சார்ந்தவள். எனவே இந்த இரண்டாவது மனைவியுடன் நாராயணன் வாழக் கூடாது என்று ஊரினரும், அவனுடைய குலத்தினைச் சேர்ந்தவர்களும் எதிர்த்தனர். அவர்களது பேச்சில் மயங்கிய நாராயணன் இரண்டாவது மனைவியின் மீதிருந்த காதல் மாறி, அவளைத் தன்னுடன் வாழவிடாமல் விரட்டிவிட்டான் அப்போது அவள் கருவுற்றிருந்தாள் மிகப்பெரிய செல்வத்தளான நவகோடி நாராயணன் முதல் மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். வீட்டை விட்டுத் துறத்தப் பெற்ற இளைய மனைவியானவள் ஒரு காளிக்கோயிலின் அருகினில் தன் இருப்பிடத்தினை

அமைத்துக் கொண்டு, அக்காளியிடம் 'தன்னுடைய கணவனுடன் தான் சேர்ந்து வாழ வேண்டும்' என்று வேண்டி வணங்கி வந்தாள். அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறத்து அக்குழந்தை வளையாபதி ஆகும். குழந்தை வளரும் சூழலில், பள்ளியிலும், மற்றவர்களாலும் தந்தை பெயர் தெரியாதவன் என்பதாக ஏளனத்திற்கு உட்பட்டான் எனவே அவன் தன் தாயிடம் தன் தந்தை யார் என்று கேட்கத் தொடங்கியது பொறுக்க முடியாமல், தாயானவள் நடந்த நிகழ்வுகளைச் சொல்லி, தந்தை யார் என்பதனைக் கூற பிள்ளையாளவன், தந்தையைத் தேடிச் சென்று தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறான். முதலில் மறுத்த நவகோடி நாராயணன், பின்னர் காளியின் அருளால் தம்மகனையும் இரண்டாம் மனைவியினையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கினான். இதுவே வளையாபதி தொடர்பாக வழங்கும் கதை நிகழ்வாகும்.

வளையாபதியின் கதை என்பதாகச் சொல்லப்படும் இக்கதையினை உண்மையான வளையாபதி காப்பியத்தின் கதை நிகழ்வு என்று ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் சான்றோர் பெருமக்கள் காரணம் வளையபாதி என்பது ஒரு சமணக் காப்பியமாகச் சுட்டப்ப கின்றது. சமண சமயத்தவர்கள் அருகப் பெருமானைத் தவிர வேறு யாரையும் கடவுள் என்று போற்றி வணங்க மாட்டார்கள். ஆனால் வளையாபதிக் காப்பியத்தில் சொல்லப்படும் தலைவனோ சிவ பக்தி உடையவனாகவும், அவனுடைய ஆசை மனைவி காளியை வழிபடுவதாகவும் நிகழ்வுகள் அமைந்துள்ளமை வளையாபதி என்பதன் காப்பித்தன்மையிலிருந்து மாறுபடுகின்றன. மேலும் சமண சமயம் பற்றிய காப்பியத்தின் நோக்கம் துறவினை வலியுறுத்துவதே ஆகும். இருந்தும் இல்லாமல் இருக்கும் நிலையே இன்பம் என்னும் கொள்கை உடையவர்கள். ஆனால் நம் கதை நிகழ்வில் வரும் நாயகனோ, தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான் என்பதாக முடிந்து விடுகின்றது, வீடுபேற்றினைப்பற்றிய சிந்தனையும், செயலும் என்று எதுவும் பேசப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் நூலில் கிடைத்துள்ள பாடல்களில் கூறப் பட்டுள்ள நிலையாமை தொடர்பான, நிகழ்வுகளையும் நம்மால் இக்கதையினுள் காண இயலவில்லை என்பதும் முக்கிய செய்தியாகும். கிடைத்துள்ள 72 பாடல்களில் ஒரு குறிப்பு கூட இக்கதை நிகழ்வினை ஒட்டியதாக அமைந்திடவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. வளையாபதியின் பாடல்களுக்கும் வழங்கப்பெறும் கதைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

**நாடகப்பனுவல்:**

வளையாபதி நாடக வடிவம் என்னும் நூலில் நாதனடிமை நவகோடி, உயிர்ப் பூவொன்று உருவானது , வளைந்தபதி , உணர்வுள்ளவரை உறவிருக்கும், உறவு தந்த ஊதியம், நட்டாற்றில் கிடைத்த நம்பிக்கைமுனை , ஆதி அறியாத ஆதங்கம், வேரைத் தேடும் விழுது, அவையத்து முறையிட்ட செயல் , வளையாபதி என்று கதையின் தன்மையைச் சுருக்கமாக உரைக்கும் முதன்மை தலைப்புகளோடு, ஒவ்வொரு முதன்மை தலைப்புகள் உள்ளும் மூன்று மூன்று காட்சிகளென 30 காட்சிகளோடு விரிகிறது. பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருள் கூறித் தொடங்கப் பட வேண்டும் என்பதையும் , பெருங்காப்பிய வருணனைக் கூறுகளாக மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம் இடம் பெற வேண்டும் என்பதையும் தண்டியலங்காரம் பெருங்காப்பியத்தின்

இலக்கணமாக முன்மொழியும். காப்பியம் நாடகமாகும் இந்தப் பனுவலில் மேற்கூறிய மரபினை அடியொற்றி முதற்காட்சி பூம்புகாரின் பெருமையையும் தமிழரின் செம்மாந்த வாழ்வையும் எடுத்துரைக்கும் பாங்கில் அமைந்திருப்பதும் அதற்காக உலகத் தமிழ் மாநாட்டில் பரிசுப் பெற்ற கவிதைகளைப் பயன்படுத்தியிருப்பதும் எண்ணத்தக்கது. வைசிய புராணத்தின் அடிப்படையில் நவகோடி நாராயணன் சிவனை வழிபடும் தொண்டனாகக் காட்டப் பெறுகிறான். ஆதலால் நாயகனைச் சிவாலயத்தில், சிவராத்திரி அன்று இடம் பொருள் ஏவல் பார்த்து அறிமுகம் செய்து வைக்கிறார் நாடக ஆசிரியர் மலர்விழி மங்கையர்க்கரசியார். அக்காட்சியில் விவரிக்கப்படும் புராணச் செய்திகள், தொன்மங்கள் குறித்த அவரின் கழுகுப் பார்வையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. நவகோடி நாராயணனின் மனைவிமாராகத் தேவி மற்றும் யாழினி அடையாளப்படுத்தப் படுகிறார்கள்.

இதில் மூத்தவள் தேவி வணிகர் குலத்தைச் சேர்ந்தவளாகவும் , இளையவள் யாழினி குயவர் இனத்தைச் சார்ந்தவளாகவும் அமைகின்றனர். நாடகத்தின் தன்மைக்காகப் பெயரளவில் சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நாராயணன் மற்றும் யாழினியின் காதல் மொழிகள் வாசகரைக் கவரும் விதத்தில் அமைந்திருக்கின்றன.யாழினியின் தாயாக வரும் தாய் மீனாட்சியின் கருத்துகள் அனைத்தும் ஏற்கனவே திருமணமான நாராயணன் ஏன் யாழினியைக் காந்தர்வ மணம் புரிய வேண்டும் என்ற சமூகக் கேள்வியின் வெளிப்பாடு. வாரிசு வேட்கையே அதற்குப் பதில் . நாராயணனின் நடத்தையில் மாற்றம் கண்ட மாமன்கள் இடித்துரைக்கும் வகையில் அடுத்த காட்சியை அமைத்துள்ளது தாய்மாமன் உறவு முறையின் தார்மீக உரிமையைப் பறைசாற்றுகிறது. தங்கத்தில் செம்பு கலந்தால் தரம் குறையும் என்னும் தொழிற்முறை பேச்சால் ஏற்கனவே குழப்பத்தில் இருந்த நாராயணன் வளைந்தபதியாகிறான். யாழினியின் காதலுக்கு விலை வைக்கிறான். உறவினர் வருகையும் உள்ளத்தின் நெகிழ்ச்சியுமாக அடுத்த அடுத்த காட்சிகள் . மூத்தவளோடு இணக்கம் இளையவளோடு பிணக்கம் என்னும் ஏக தீர்மானம். திக்கற்ற யாழினிக்கும் அவளின் பிள்ளை குமரனுக்கும் தெய்வமே துணை என நகர்கிறது கதைக்களம். களவு காலத்தில் கொடுக்கப்பட்ட கை வளையல் ஒன்றே எஞ்சிய நம்பிக்கையாய் விஞ்சி நிற்கிறது. தகப்பன் பெயர் தெரியாதவன் அல்ல தன்மகன் என்னும் ஆதங்கத்தில் உண்மையை உரைக்க வைக்கும் நகர்வுகள் என்று பயணிக்கிறது நாடகம். வேரைத் தேடிய விழுது நீதிக்கேட்டு மன்றம் ஏறிய உடன் நிகழும் மனமாற்றம் என இறுதி அத்தியாயத்தை நோக்கி செல்லும் போதும், எந்த ஒரு கதாபாத்திரத்தையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இல்லாமல் கொண்டு சேர்த்த நாடக ஆசிரியரின் நுட்பம் எண்ணத்தக்கது. சிவராத்தியில் தொடங்கிய நாடகத்தின் காட்சியைக் கிருஷ்ண ஜெயந்தியில் நிறைவு செய்கிறார்.

**வானொலி அரங்கேற்றம்:**

எல்லா நாடக வகைகளுக்கும் இருப்பது போல வானொலி நாடகத்திலும் சிக்கல் (crisis), போராட்டம் (conflict), உச்சக் கட்டம் (climax), முடிவு (conclusion) ஆகியன இருக்க வேண்டும். காட்சியின் துணையின்றி ஒலியின் துணையால் மட்டும் வானொலி நாடகம் அமைவதால் அதில் உணர்ச்சிச் சுவை மிக்க பகுதிகள் மட்டுமே இருக்க வேண்டும் .

நாடகம், எப்படி வளரப் போகிறது என்று நேயரை எதிர்பார்க்க வைப்பதாக இருக்க வேண்டும்.

நாடகக் கதையின் உச்சக் கட்டத்தை நோக்கி ஒவ்வொரு காட்சியும் வளர வேண்டும்.
நாடகத்தின் மையச் சிக்கல் தெளிவாக்கப்பட்டிருக்க வேண்டும்.
ஒவ்வொரு பாத்திரமும் பேசுகிற வசனம் தெளிவாக இருக்க வேண்டும்.
நாடகத்தின் ஒவ்வொரு காட்சியிலும் யார் யார் பேசுகிறார்கள் என்பது தெளிவாக உணர்த்தப் பட்டிருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு காட்சியில் நிறையப் பாத்திரங்கள் இடம்பெற்றால் குரலால் அடையாளம் காணும் வகையில் தெளிவாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எந்த இடத்தில் ஒரு காட்சியின் கதை நிகழ்கிறது என்பது தெளிவாக்கப் பட்டிருக்க வேண்டும்.

நாடகத்தில் வருணனைகள் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். சிக்கலுக்குத் தீர்வு சொல்லப் பட்டிருக்க வேண்டும். காட்சிகள் விறுவிறுப்புடன் செல்ல வேண்டும். காட்சியின் சூழ்நிலை உணர்த்தப் பட்டிருக்க வேண்டும். நாடகத்தின் வேகம் ஒரே சீராகச் செல்வதாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு நாடகத்தைத் தயாரித்துள்ளார் மலர்விழி மங்கையர்க்கரசி அவர்கள்.

**நிறைவுரை :**

வளையாபதி காப்பியம் எடுத்துரைக்கும் அறநெறிகளை , வழங்கப்பெறும் கதையின் துணைக் கொண்டு நாடகப் பனுவலாக்கம் செய்வதோடு மட்டும் இல்லாமல் வளையாபதி செய்யுட்களுக்கும் கதைக்கும் தொடர்பே இல்லை என்ற பெரும் குறையைக் களையும் விதத்தில் காட்சிகளின் ஊடே வளையாபதி செய்யுட்களை சாட்சியாக்கி , இசையை நீட்சியாக்கி, வானொலியில் அரங்கேற்றம் செய்ததன் மூலம் வளையாபதி நாடகம் முப்பரிமாண நிலையை அடைந்திருக்கிறது.

**பார்வை நூல்கள்:**

1.வளையாபதி (நாடக வடிவம்) - முனைவர். இராம மலர்விழி மங்கையர்க்கரசி - பாவை பப்ளிகேஷன்ஸ் -சென்னை – 2007

2.வளையாபதி குண்டலகேசி மூலமும் உரையும் - உரை : கமலா முருகன் - சாரதா பதிப்பகம் - சென்னை -2018

3.தமிழ் இலக்கிய வரலாறு - மு.வரதராசன் -சாகித்திய அக்காதெமி - புதுதில்லி -2014

4.தமிழ் இலக்கிய வரலாறு - மது.ச.விமலானந்தம்- முல்லை நிலையம் – 2012

5.தமிழியல் ஆய்வு -ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம் - மதுரை- 1995

6.தமிழியல் ஆய்வு -ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம் - மதுரை- 1994

7.ஆய்வுச் சிந்தனைகள் - ஐந்தமிழ் ஆய்வு மன்றம்- மதுரை - 2016